# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 245/5 — 1976 දෙසැම්බර් 29 වැනි බදාදා — 1976.12.29

245/5 ஆம் இலக்கம் — 1976 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 29 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் ஆசிரியர் கலாசாலைகளும் (துணை ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டம்***

***யாழ்ப்பாணம், நல்லூர் ஆசிரியர் கலாசாலையும் யாழ்ப்பாணம் நல்லூர் (கிறிஸ்தவ தேவாலய) தமிழ்க்கலவன் பாடசாலையும்***

***10 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

*1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் ஆசிரியர் கலாசாலைகளும் (துணை ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவால் எனக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு கல்வி அமைச்சர், பதியுத்தீன் மஹ்மூத் ஆகிய நான் 1962.7.13 ஆந் திகதிய 13,209 ஆம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் திருத்தப்பட்டதற்கமைய 1961.9.30 ஆந் திகதிய 12,685 ஆம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 122 ஆம் இலக்க உரித்தளித்தற் கட்டளையை மேலே குறிப்பிடப்பட்டுள்ள உரித்தளித்தற் கட்டளையின் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பந்திகளில் விவரிக்கப்பட்டுள்ள காணிகளும் கட்டடங்களும் தொடர்பாக மாத்திரம் 1961 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பதினைந்தாம் திகதி தொடக்கம் இத்தால் அழிக்கின்றேன்.*

***பதியுத்தீன் மஹ்மூத்,***
***கல்வி அமைச்சர்.***

***எனது எண்: பா. தி/9/6.***
***கல்வி அமைச்சு,***
***கொழும்பு 2.***
***1976.11.30.***
***12-76/1***

---

***1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் ஆசிரியர் கலாசாலைகளும் (துணை ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டம்***

***10 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

***யா/திறிபெக் கல்லூரி, சாவகச்சேரி***

*1961 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் ஆசிரியர் கலாசாலைகளும் (துணை ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவால் எனக்கு உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு கல்வி அமைச்சர், பதியுத்தீன் மஹ்மூத் ஆகிய நான், கீழே கொடுபட்டுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் தொடர்பானதும் 1962.2.28 ஆந் திகதி 12,998 ஆம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான 1,145 ஆம் இலக்க உரித்தளித்தற் கட்டளையை 1962 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆந் திகதி தொடக்கம் இத்தால் அழிக்கின்றேன்.*

***இல. பா.தி/9/405,***
***கல்வி அமைச்சு,***
***கொழும்பு 2,***
***1976.10.20.***

***பதியுத்தீன் மஹ்மூத்,***
***கல்வி அமைச்சர்.***

***அட்டவணை***

*1960 ஆம் ஆண்டு யூலாய் மாதம் 21 ஆந் திகதி யா/திறிபெக் கல்லூரி நடத்தப்பட்டு, பேணப்பட்டதுமான இடம், அதாவது உத்தரவு பெற்ற நிலஅளவையாளரும் மட்டம் படித்துபவருமான திரு. பீ. ஏ. சேனாதிராசா அவர்களால் வரையப்பட்ட 1962.11.12 ஆந் திகதிய 53 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் 1 ரூட் 34 பேர்ச் பரப்புக் கொண்டதும் 'B' ஆம் கூறு எனக் காட்டப்பட்டுள்ளதுமான பகுதி.*

***12-76/2***

**1976 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மக்கள் குடியிருப்புச் சட்டம்**
**1 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

*1976 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மக்கள் குடியிருப்புச் சட்டத்தின் 1 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப் பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கமத்தொழில், காணி அமைச்சர் ஹெக்டர் சேனரத் ராஜகருண பண்டார கொப்பேகடுவ ஆகிய நான், மேற் சொல்லப்பட்ட சட்டம் நடைமுறைக்கு வரவேண்டிய தேதியாக 1977 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் நாளை இக்கட்டளை மூலம் நியமிக்கின்றேன்.*

எச். எஸ். ஆர். பீ. கொப்பேகடுவ,
கமத்தொழில், காணி அமைச்சர்.

கொழும்பு,
1976.12.29.

12-85

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது